பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 06 2024 **TUESDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்றத்தின் புதிய மக்களவைத் தலைவருக்கான தேர்தல் நாளை காலை நடைபெறுகிறது.

2. காவிரி மேலாண்மை ஆணைய கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது

3. புதிய குற்றவியல் சட்டங்கள் குறித்து பொறுப்புடன் செய்திகளை வெளியிடுமாறு நீதிபதி திரு. நாகமுத்து ஊடகங்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. போர் விதி மீறல்கள் குறித்து ரஷ்யா மீது, யுக்ரைன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் புகார் அளித்துள்ளது

5. அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டி டெக்சாஸில் இன்று தொடங்குகிறது.

>>>><<<<

மக்களவைத் தலைவர் பதவிக்கு நாளை தேர்தல் நடைபெறவுள்ளள நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணி சார்பாக திரு ஓம். பிர்லா வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித் ஷா, திரு பியூஷ் கோயல் ஆகியோர் அவரை ஆதரிப்பது தொடர்பாக, எதிர்க்கட்சித் தலைவர்களுடன் இன்று ஆலோசனை நடத்தினர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு கே சி வேணுகோபால், மற்றும் திமுக-வின் மூத்த தலைவர் திரு டி ஆர் பாலு ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டதில், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதனையடுத்து, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு கொடிக்குன்னில் சுரேஷ், எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினரும், மக்களவை முன்னாள் தலைவருமான திரு ஓம். பிர்லா, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வேட்பாளர் திரு கொடிக்குன்னில் சுரேஷ் ஆகியோர் இன்று வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, பிரதமரின் வேண்டுகோளின்படி, ஆக்கபூர்வமான முறையில் செயல்பட எதிர்க்கட்சிகள் விரும்புவதாகவும், பாரம்பரிய

முறைப்படி மக்களவை துணைத்தலைவர் பதவிக்கு காங்கிரஸ் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இதற்கிடையே, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி தலைவர்களின் கூட்டம் இன்றிரவு 8 மணிக்கு புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் மக்களவைத் தலைவர் தேர்தல் குறித்த ஆலோசனைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் இரண்டாவது நாளாக இன்று பதவியேற்றுக் கொண்டனர்.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், ரேபரேலி மக்களவை உறுப்பினருமான திரு. ராகுல்காந்தி இன்று பதவியேற்றுக் கொண்டார்.

தமிழகத்தைச் சேர்ந்த திமுக, காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் கட்சி உறுப்பினர்களும் இன்று பதவியேற்றனர்.

இடைக்கால அவைத்தலைவர் திரு. **Bhartruhari Mahtab** புதிய உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

>>>><<<<

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைக் கூட்டத்தின் ஏழாவது அமர்வு இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

மத்திய இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி, தலைமை பொருளாதார ஆலோசகர் திரு வி. அனந்த நாகேஷ்வரன், நிதித்துறை செயலர் திரு டி வி சோமநாதன், உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

>>>><<<<

காவிரி மேலாண்மை ஆணையத்தின் 31-வது கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

காவிரி மேலாண்மை ஆணையத் தலைவர் திரு. எஸ்.கே. ஹல்தர் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, புதுச்சேரியைச் சேர்ந்த உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிலுவையில் உள்ள 5 புள்ளி 367 டிஎம்சி தண்ணீரையும், ஜூலை மாதம் திறக்கவேண்டிய 31 புள்ளி இரண்டு நான்கு டிஎம்சி தண்ணீரையும் கர்நாடகா திறந்து விடவேண்டும் என்று தமிழ்நாடு அரசு வலியுறுத்தியது.

கர்நாடக அரசு தற்போது அணையில் போதிய நீர் இருப்பு இல்லை என்பதால், தமிழகம் கேட்கும் அளவிற்கு நீரை திறந்து விடமுடியாது என்று தெரிவித்தது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட காவிரி மேலாண்மை ஆணையம் இதுகுறித்து கலந்தாலோசித்து முடிவை பின்னர் அறிவிப்பதாக தெரிவித்துள்ளது.

>>>><<<<

பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா, அண்மையில் தாம் மேற்கொண்ட இந்தியப் பயணம் ஆக்கபூர்வமாக அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்தப் பயணம் அமைந்திருந்ததாக அவர் இன்று டாக்காவில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

**Teesta** நதி திட்டம், பங்களாதேஷிற்கு பயனளிக்கும் விதத்தில் அமையும் என்றும் இதற்கான திட்ட அறிக்கையை இந்தியாவும் சீனாவும் தனித்தனியாக அளித்துள்ளதாகவும், பங்களாதேஷ் மக்கள் பயன்பெறும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டம் தொடர்பாக தொழில்நுட்ப வல்லுநர்களை இந்தியா விரைவில் அனுப்பவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**Teesta** நதி பிரச்சினையில் இருநாடுக்ளுக்கும் இடையே பிரச்சினை நிலவுவதாகவும், இந்த திட்டத்தை இந்தியா அமல்படுத்தினால் அது சிறப்பாக அமையும் என்றும் திருமதி. ஷேக் ஹசீனா கூறினார்.

இந்தியா – பங்களாதேஷ் இடையேயான ரயில் போக்குவரத்து திட்டம் இருநாடுகளுக்கும் சமூக பொருளாதார ரீதியாக பல்வேறு வளர்ச்சிக்கு வித்திடும் என்றும் அவர் தெரிவித்தார்.

பங்களாதேஷின் சமூக பொருளாதார வளர்ச்சியின் புதிய கதவுகளை தமது இந்தியப் பயணம் திறந்து வைத்துள்ளதாகவும் திருமதி. ஷேக் ஹசீனா குறிப்பிட்டார்.

>>>><<<<

விரைவான விசாரணையின் மூலம் நீதி கிடைக்கச் செய்வதே சரியான நீதி என்று சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. நாகமுத்து தெரிவித்துள்ளார்.

புதிய குற்றவியல் சட்டங்கள் அடுத்த மாதம் 1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வருகின்றன.

இதனையொட்டி, சென்னை பத்திரிகை தகவல் அலுவலகம் சார்பில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக வளாகத்தில் இன்று ஊடகவியலாளர்களுக்கான பயிலரங்கு நடைபெற்றது.

அப்போது பேசிய அவர், இந்திய நீதி சட்டம், இந்திய சிவில் பாதுகாப்பு சட்டம், இந்திய சாட்சிய சட்டம் ஆகியவை குறித்த சரியான புரிதல்களை ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில், இந்த பயிலரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த சட்டங்கள் குறித்த செய்திகளை வெளியிடும்போது, பொறுப்புடனும், பொதுநலத்துடனும், கண்ணியத்துடனும் செய்திகளை வெளியிட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படும் நபர்களின் அடையாளங்களை வெளியிடுவதை கண்டிப்பாக ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் என்றும் திரு. நாகமுத்து அறிவுறுத்தினார்.

**>>>><<<<**

மத்திய அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் அறிவியல் தொழில்நுட்ப உபகரணங்கள் ஆய்வு அமைப்பின் சார்பில் நடத்தப்படும் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தொழில்துறையினருக்கான கண்காட்சி கருத்தரங்கு சென்னையில் இன்று தொடங்கியது.

தரமணியில் உள்ள மத்திய அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கழக வளாகத்தில் நடைபெற்றுவரும் இந்த இரண்டு நாள் கண்காட்சியின் முக்கியத்துவம் குறித்து விஞ்ஞானி திரு. அய்யப்பன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**>>>><<<<**

இந்தியாவிற்கான சீன தூதர் திரு. **Xu Feihong** வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

இதுகுறித்து சமூகவலைதளப் பதிவில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், இரு நாடுகளுக்கு இடையேயான உறவு மற்றும் மக்களுக்கு இடையேயான நட்புறவு, வளர்ச்சி ஆகியவை குறித்து அவருடன் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

யுக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இரண்டரை ஆண்டுகள்கடந்துள்ள நிலையில், போர் விதிகளை மீறி ரஷ்யா பல்வேறு கொடூர செயல்களை அரங்கேற்றியுள்ளதாக யுக்ரைன் சர்வதேச குற்றவியில் நீதிமன்றத்தில் புகார் அளித்துள்ளது.

இந்நிலையில் யுக்ரைனில் பொதுமக்கள் வசித்து வரும் குடியிருப்பு பகுதிகளை தாக்கியதாக ரஷ்யாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அந்நாட்டு ராணுவ தளபதி ஆகியோருக்கு சர்வதேச குற்றவியில் நீதிமன்றம் கைது வாரண்ட் பிறப்பித்துள்ளது.

>>>><<<<

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டி டெக்சாஸில் இன்று தொடங்குகிறது.

உலக தரவரிசையில் முன்னணியில் உள்ள வீரர்கள் பலர் இந்தப் போட்டியில் பங்கேற்கின்றனர்.

இந்தியாவின் **Treesa Joly, Gayathri Gopichand** இணை மகளிர் இரட்டையர் பிரிவிலும், கிருஷ்ணபிரசாத் -சாய் ப்ரத்திக் இணை ஆடவர் இரட்டையர் பிரிவிலும் பங்கேற்கின்றனர்.

ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் பிரியன்சு ரஜாவத், மால்விகா பன்சோத் உள்ளிட்ட வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

ஒலிம்பிக் போட்டி அடுத்த மாதம் பாரிஸில் நடைபெறவுள்ள நிலையில், அதில் பங்கேற்பதற்காக தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ள பி.வி. சிந்து, எச்.எஸ். பிரணாய், லக்ஷயா சென், ரெங்கி ரெட்டி, சிராக் ஷெட்டி, அஸ்வினி பொன்னப்பா மற்றும் தனிஷா கிறாஸ்டோ ஆகியோர் இந்த போட்டியில் பங்கேற்கவில்லை.

>>>><<<<

சீன ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**Tianjin-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-2 என்ற செட்கணக்கில் தைவானின் **Bang Yin-**ஐ வென்றார்.

>>>><<<<

உலக டேபிள் டென்னிஸ் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Diya Chitale** அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

துனிஷியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் தகுதிச்சுற்று ஆட்டத்தில் அவர் துனிஷியாவின் **Fadwa Garci-**வை 6-11, 11-5, 9-11, 11-6, 11-4 என்ற செட்கணக்கில் வென்றார்.

**>>>><<<<**

உலகக் கோப்பை ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் அரையிறுதிக்கு இந்தியா, இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

முதல் அரையிறுதிப் போட்டி நாளை டிரினிடாட்டில் உள்ள **Brainlara** மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மற்றொரு போட்டி நாளை மறுநாள் இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே கயானாவில் நடைபெறுகிறது.

**>>>>END<<<<**